பக்கங்கள்:-20

காலை முரசு


முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 02 | திங்கட்கிழமை | 18.12.2023 | அதிர்வு 139

## மட்டக்களப்பில் வெள்ளத்தால் 4 ஆயிரத்து 254 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் தொடர் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆயிரத்து 334 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 254 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 10 வீடுகள் 06

# வெற்றி வாகை சூடினார் ஈழத்துக் குயில் கில்மிஷா




தென்னிந்தியாவின் ZEE தமிழ் தொலைக்காட்சி நடத்திய சரிகமப இசை நிகழ்ச்சிப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுமி கில்மிஷா முதலிடம் பெற்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் தென்னியந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிப் போட்டியொன்றில் முதலாமிடத்தைப் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைக் கில்மிஷா தனதாக்கியுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சரிகமப இசை நிகழ்ச்சிப் போட்டி ஆரம்பமாகியிருந்தது. இதில் இலங்கையில் இருந்து இரண்டு சிறுமிகள் பங்கேற்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கில்மிஷா, மலையகத்தைச் சேர்ந்த அஷானி ஆகியோர் இந்த இசை நிகழ்ச்சிப் போட்டியில் கலந்துகொண்டு, தமது திறமைகளை வெளிப்படுத்திருந்தனர்.

இதில் இறுதிப் போட்டிக்கு இரண்டாவது ஆளாகக் கில்மிஷா தெரிவாகியிருந்ததுடன், அஷானி இறுதித் 05

# ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு மிக விரைவில் முடிவு கட்டப்படும்

## அடித்துக் கூறுகின்றார் கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)



ராஜபக்ஷ தரப்பினரது - ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பினரது அரசியல் காலம் மிக விரைவில் முடிவுக்கு வரும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொக்குவிலில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். 05

# இந்திய மீனவர்கள் 14 பேர் நேற்று கைது

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)



இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 14 பேர் காரைநகர் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் 06



ஏறத்தாழ இன்னும் ஒரு மாதத்தில் இலங்கைத் தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு.

அதை ஒத்திவைத்தால் இன்னும் கொஞ்ச காலத்துக்குக் கட்சித் தலைவராகவேனும் பதவி ஒன்றில் நீடிக்கலாம் என்ற நப்பாசை மாவை சேனாதிராஜாவுக்கு. கடைசிக் கட்டத்திலும் அதை ஒத்திவைப்பதற்கு பகீரதப் பிரயத்தனத்தில் அவர் ஈடுபடாமல் இல்லை.

தலைவர் பதவிக்கு சுமந்திரனும் 06

# மருதடி பிள்ளையார் கோவிலில் கஜமுகா சூரன் போர் உற்சவம்







யாழ்ப்பாணம் மருதடி பிள்ளையார் கோவிலில் விநாயகர் சஷ்டி விரதத்தினை முன்னிட்டு கஜமுகா சூரன் போர் நேற்று இடம் பெற்றது.

விநாயகர் சஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்றிய தினம் ஞாயிற்றுக்கிழமை, மாலை விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, வசந்தமண்டபப் பூஜை இடம்பெற்று, விநாயகப் பெருமான் உள்வீதி உலா வந்து, இடும்பன் வாகனத்தில் எழுந்தருளி கஜமுகா சூரனை வதம் செய்தார்.

சூரன் போர் திருவிழாவில்அடியவர்கள் கலந்து கொண்டு விநாயக பெருமானை வணங்கினார்கள்.

# அதிக வரி விதிக்கப்படுவதால்தான் முட்டை உற்பத்தியில் பின்னடைவு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கூறுகிறார்

நமது நாடு முட்டையில் தன்னிறைவு அடையவில்லை. இதற்குத் தேவையான மூலப் பொருள்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே இதற்குக் காரணம்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிங்கிரிய தொகுதி ஐக்கிய இளைஞர் சக்தியின் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில் –

"நமது நாடு முட்டையில் தன்னிறைவு அடையவில்லை. இதற்குத் தேவையான மூலப் பொருள்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே இதற்குக் காரணம். இதனால் முட்டையைக் கூட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணியைக் கூட இழக்க நேரிட்டுள்ளது.

"நாட்டில் முறையான முட்டை உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தத் தொழிலுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் உள்நாட்டில் முட்டைகள் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்யும் அதேவேளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

நாட்டில் ஆக்கபூர்வமான வேலைத் திட்டம் இல்லாததும் தேவையான வசதிகளுடன் தேசிய உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்படாமையே இதற்குக் காரணம். முட்டையில் தன்னிறைவு பெறுவது மட்டுமின்றி குடிசை தொழிலை சிறு தொழிலாக மாற்றி, தொழில்முனைவோரை உருவாக்கி, முட்டை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறி, அந்த இலக்கை நோக்கி செல்ல வேண்டும்.

இதேவேளை கடற்கரையில் இருந்து



200 கடல் மைல் தொலைவு வரையிலான கடல் பரப்பு நாட்டுக்கு சொந்தமானது என கூறப்பட்டாலும் அது முறையாக பயன்படுத்தப்படவில்லை. நாட்டில் நிதி இல்லையென்றால் கடல்சார் பொருளாதார முயற்சியாண்மைகளுக்கு கூட்டுத் திட்டங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை எம்மால் அடையலாம். இவ்வாறான புதிய ஆக்கபூர்வமான தீர்வுகள் நாட்டுக்கு தேவை."

– என்றார்.



# 1143 கிலோ பீடி இலை மூடைகளுடன் 4 பேர் நீர்கொழும்புக் கடலில் கைது!

## இரண்டு இயந்திரப் படகுகளும் சிக்கின





(ரஸீன் ரஸ்மின்)

நீர்கொழும்பு கடற்பிரதேசத்தில் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 1143 கிலோ கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், சந்தேகத்தின் பெயரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயன்படுத்திய இரண்டு இயந்திரப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 33 மற்றும் 53 வயதுக்கு உட்பட்ட நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்குக் கடற்படை கட்டளைக்கு சொந்தமான களனி கெமுனு மற்றும் ரங்கலா ஆகிய இலங்கை கடற்படை கப்பல்கள் ஒன்றாக இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே பீடி இலைகள் கைப்பற்றப்பட்டமையுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான இரண்டு இயந்திரப் படகுகள் கரையை நோக்கி பயணிப்பதை அவதானித்த கடற்படையினர் அந்த இரண்டு இயந்திர படகுகளையும் நிறுத்திச் சோதனை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, இரண்டு இயந்திர படகுகளிலும் 35 உர மூடைகள் காணப்பட்டுள்ளன. அவற்றைக் கடற்படையினர் சோதனையிட்டுள்ளனர்.



அந்த 35 உர மூடைகளிலும் 1143 கிலோ கிராம் பீடி இலைகள் இருப்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 1143 கிலோ கிராம் பீடி இலைகள், இரண்டு இயந்திர படகுகள் ஆகியவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடளாவிய ரீதியில் பொலிஸ் முன்னெடுத்த விசேட நடவடிக்கைகளில் 83 பேர் கைது!

நாடளாவிய ரீதியில் பொலிஸாரின் விசேட நடவடிக்கைகளின்போது 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒழிக்கும் விசேட நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் காரணமாகவே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்களில் 45 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.












# வரலாற்றுச் சாதனை படைத்த ஈழத்துக் குயிலின் இசை வரலாறு



**- வேதநாயகம் தபேந்திரன் -**

தென்னிந்தியாவின் ZEE தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப போட்டியில் எங்கள் இசைக்குயில் கில்மிஷா வெற்றி பெற்றுவிட்டார். அவருக்கு உலகெங்கில் இருந்தும் வாழ்த்துக்கள் குவிகின்றன.

கில்மிஷாவின் தந்தை கில்ஷனின் பெற்றோர் யாழ்ப்பாணத்தின் புறநகரான அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

கில்மிஷாவின் தாயார் தர்மினி, கிளிநொச்சி – உருத்திரபுரம், எட்டாம் வாய்க்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தாயார் தர்மினியின் தந்தையார் தர்மநாதன், அவரது மனைவி லீலாவதி ஆகியோர் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி அல்வாய் வடக்கு, துன்னாலை ஆகிய கிராமங்களைப் பரம்பரையாகக் கொண்டவர்கள். தர்மநாதன் ஊரறிந்த ஒரு சமூக சேவையாளர். அவர் பிறந்தது வடமராட்சியில்தான். வளர்ந்தது முழுவதும் கிளிநொச்சியில்தான்.

கில்ஷன் கட்டடங்களுக்கான மணலை அனுமதிப் பத்திரம் பெற்று விற்கும் வாகன உடமை கொண்ட ஒரு தொழில் அதிபர். தொழில் நிமித்தம் கிளிநொச்சி சென்று வரும் போது தர்மினியை விரும்பிப் பெற்றோர் சம்மதத்துடன் காதல் திருமணம் செய்து கொண்டார்.

கில்சன் சிறந்த சமூக சேவகராகப் பலராலும் மதிக்கப்படும் ஒருவர். இவரது குடும்பம் யாழ். கண்டி வீதியில் அரியாலையில் வசித்து வருகின்றது.

கில்மிஷாவுக்கு ஒரு தம்பி உள்ளார். கில்மிஷா யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் பல துறைகளிலும் திறமை காட்டி வரும் ஒரு மாணவி.

இவர்களது குடும்பம் அரியாலை கலைமகள் சனசமூக நிலைய வீதியில் குடியிருந்த போது கில்மிஷாவின் இசைத் திறமையைக் கண்ட இசை ஆசிரியை திருமதி கமலோஜினி உமாசங்கர் அருகிலுள்ள சரஸ்வதி கோயிலில் பாடலுக்குரிய ஆரம்ப நிலையை எடுத்துக் கொடுத்து ஊக்குவித்தார்.

கில்மிஷாவின் இசைத்திறமையைக் கண்ட அரியாலை சாரங்கா இசைக்குழுவினர் அவரை ஒரு மழலைப் பாடகராகத் தமது நிகழ்ச்சிகளில் அறிமுகம் செய்தார்கள்.

அதேவேளை, அரியாலை கலைமகள் சனசமூக நிலையமும் கில்மிஷாவின் இசைத் திறமைக்கு நிறையவே களம் அமைத்துக் கொடுத்தது.

கலைமகள் கிராமமே அவருக்கு ஆதரவாக எப்போதும் நின்றது. தந்தையார் கில்ஷனைக் கலைமகள் சனசமூக நிலையம் தனது தலைவராகக் கூடத் தெரிந்து கௌரவித்தது.

கில்மிஷாவின் தென்னிந்திய இசைப் பயணத்துக்கு அவரது பெற்றோரது நிதிப் பங்களிப்புக்கு மேலாக அரியாலை கலைமகள் சனசமூக நிலையமும், உறவுகளும் கைகொடுத்து உதவினார்கள். போட்டி நடைபெற்ற போதும் போட்டி நிறைவுக்கும் தமிழகம் சென்று நேரில் பங்களித்தார்கள். தமது இசைமகள் வெற்றி மகளாகத் திரும்பி வர உற்சாகமூட்டினார்கள்.

கில்மிஷாவின் பாடல் திறமையைக் கண்ட இசைக்குழுக்கள் பல தமது மேடை நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புக் கொடுத்தார்கள்.

எந்தவொரு பாடலையும் மிக இயல்பான உணர்வுடன் பாடும் அவரது குரல் வளம் அதீதமானது. ZEE தமிழ் தொலைக்காட்சி அலைவரிசையினர் சென்ற வருடம் யாழ்ப்பாணம் வந்த போது கில்மிஷாவின் திறமையைக் கண்டு தமது நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதாகக் கூறிச் சென்றார்கள். சொன்னபடியே அழைத்தார்கள்.

கில்மிஷா இறுதிப் போட்டியிலும் முதலாவதாக வருவார் என்று அவரது முதல் பாடலான "குயில் பாட்டு ஹோ வந்ததென்ன இளமானே..." பாடல் மூலமாகக் கட்டியம் கூறினார். சொன்னபடியே நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவர் வெற்றி வாகை சூடினார். 10 இலட்சம் இந்திய ரூபா பணப் பரிசை அவர் வென்றார். இசையால் உலகை ஆளும் வல்லமை கொண்டு வளர்வாய் எம் இசைக்குயில் செல்வ மகளே!

# கைதடியில் பஸ் மீது தாக்குதல்

**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10மணியளவில் கண்ணாடி போத்தலால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலைப் பகுதியில் இருந்து யாழ் நோக்கி ஏ9வீதி ஊடாகச் சென்ற பஸ் மீதே கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம் முன்பாக வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது பஸ்ஸின் வாயில் கதவுக் கண்ணாடி சேதமடைந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பிரகாசமாக ஒளி எழுப்பியவாறு வந்தே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது பஸ்ஸில் பயணித்த எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# களனி பல்கலையின் இரு பீடங்களின் கற்கை நெறிகள் இன்று தொடக்கம்

களனிப் பல்கலைக்கழகத்தில் மூடப்பட்டுள்ள ஏனைய பீடங்களின் கற்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படும் என உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் நிலாந்தி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்களின் கற்கைகள் இவ்வாறு மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று பாது காப்பு உத்தியோகத்தர்கள் இருவரை தாக்கிய சம்பவத்தி னால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக களனிப் பல்கலைக் கழகம் கடந்த 5 ஆம் திகதி தற்காலிகமாக மூடப்பட்டது.




## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புதிய தலைவ ராக மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவைச் சில தினங்களுக்கு முன்னர் தெரிவு செய்திருந்தது. அந்தக் கூட்டத்தில் தனது பதவியேற்பு உரை நிகழ்த்தியபோது, போர் வெற்றிக்கும் பொரு ளாதார வளர்ச்சிக்கும் பொதுஜன பெரமுன கூட்டணியே காரணம் என்ற கருத்துக்களை அவர் தெரிவித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது அவர் சார்ந்த அணியோ இலங்கையின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு எதுவுமே செய்யவில்லை என்பதுதான் உண்மை. பொருளாதார வளர்ச்சி யின் பெயரில் அவர்களது காலத்தில் அவர்கள் முன்னெடுத்த அனைத்து வேலைத்திட்டங்களுமே நாட்டைக் கடனுக்குள் தள்ளியுள்ளது.

குறிப்பாக நாட்டை சீனாவின் கடன் பொறிக்குள் தள்ளி சீனாவை இலங்கை விவகாரங்கள் தொடர்பாக தவிர்க்க முடியாத தரப்பாகக் கொண்டுவந்து நிரந்தரமாக இலங்கை யில் பிடி ஒன்றை வைத்திருப்பதற்கான சூழலை ஏற்படுத்து வதற்குத்தான் ராஜபக்ஷ தரப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் என்ற பேரிலே நடத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் அமைந்தன.

அம்பாந்தோட்டைத் துறைமுகம், கொழும்பு தாமரைக் கோபுரம், கொழும்புத் துறைமுக நகரம் என அனைத்துமே முழுக்க முழுக்க நாட்டினுடைய அபிவிருத்தி என்கினற நோக் கத்தோடு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் அல்ல.

மாறாக இந்த வேலைத்திட்டங்களினூடாக இலங்கை சீனா வுக்குக் கடன் பட்டு முழுமையாகத் தவிர்க்க முடியாத சக்தியாக இடம்பெறுவதற்குச் சீனாவுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத் திருந்தமையே உண்மை. குறித்த வேலைத்திட்டங்கள் அனைத் தும் இன்று நாட்டுக்குச் சுமையாக இருக்கின்றனவே தவிர டொலர் வருமானங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்ற திட்டங்கள் அல்ல.

உண்மை இதுவாக இருக்கின்றபோது, தான் ஒரு புதிய பதவியை எடுத்ததால் இவ்வாறு கூறினால் மக்கள் அதை நம்புவினம் என்ற அடிப்படையில் அவர் இதனைக் கூறியதா கவே பார்க்கின்றோம். மக்கள் இந்த உண்மைகளை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மக்கள் 5 வருடங்கள் ஆணை கொடுத்திருந்த நிலையில் 2 வருடங்களுக்கு முன்னதாகவே கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டி அடித்திருந்தனர். அதற்கு முன்னதாக பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவையும் வீட்டுக்கு அனுப்பியிருந்தனர்.

ஆகவே, மக்களின் நிலைபற்றி பொதுஜன பெரமுன தரப்புக்கு விளங்கவில்லை என்றால் அவர்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் அனைத்து மக்களும் தெளிவான பதிலை வழங்குவார்கள்.

இதேவேளை, போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தது தான்தான் என்று ஒரு கருத்தையும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். உண்மையில் அவர் நடத்தியது போர் அல்ல இனப்படுகொலையே. இன்று காசாவில் நடைபெறுவதும் போர் அல்ல. அங்கு நடைபெறுவதும் இனப்படுகொலையே.

கண்ணை மூடிக்கொண்டு இருக்கின்ற அனைத்தையும் அழிப்பது போர் அல்ல. இனப்படுகொலை செய்வதற்கு ஒரு கெட்டித்தனமும் தேவையில்லை. கிட்லர் போன்ற ஒரு முட்டா ளும் செய்யலாம். தமிழினத்துக்கு நடந்தது இனப்படுகொ லையே. காசா மக்களுக்கும் அதுதான் நடக்கின்றது.

போர் என்ற பெயரில் நடந்த இனப்படுகொலை எந்தளவு தூரத்துக்கு அது ஓர் இனப்படுகொலை என விளங்கிக் கொள்கின்ற நிலை உருவாகியிருக்கின்றதென்றால் அந்த இனப்படுகொலை செய்த தரப்பு தங்களுடைய நலன்கள் என்று வருகின்ற போது தமிழர்களுக்கு எதிராகப் பாவித்த ஆயுதங்களை விசேடமாக சட்ட ஆயுதங்களை சிங்கள மக்களுக்கு எதிராகவும் பாவிக்கத் தயார் என்ற நிலையைக் காட்டியிருக்கின்றது.

இந் நிலையில், இவ்வளவு காலமும் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த விடயங்களை, ஆட்சியாளர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று அவற்றைக் கேள்விக்குட்படுத்தாமல் இருந்த சிங்கள மக்கள் இன்று தங்களுக்கே நடந்த பின்னர் தமிழர்களுக்கு எவ்வாறு நடந்திருக்கும் என்பதாக விளங்கிக் கொள்வதாகத்தான் நிலைமை இருக்கின்றது.

போரிலே வெற்றி பெற்றதாகக் கூறுவது உண்மையில் கவலைக்குரிய ஒரு விடயம். அவர்களது வீழ்ச்சிக்கு அடிப் படைக் காரணங்கள் எதனையும் இதுவரை அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை என்பதையும் தொடர்ந்தும் அதே பாதையில்தான் செல்ல விரும்புகின்றார்கள் என்பதனையும் காட்டுகின்றது.

தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்தியவர்கள் இன்று பொருளாதாரப் போரை நடத்துகின்றார்கள். இந்தப் பொருளாதாரப் போரானது சாதாரண, நடுத்தர வர்க்க மக்களுக்கும், மிகவும் கஷ்டப்பட்ட மக்களுக்கும் எதிராகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அவர்கள் செய்த அநியாயத்துக்கும் கொள்ளையடித்ததற்கும் நாட்டினுடைய பணத்தை வெளிநாடுகளில் உள்ள தங்களு டைய சொந்த நிதியங்களுக்குக் கொண்டுபோய் சேர்த்ததன் விளைவாக நாட்டினுடைய ஒட்டுமொத்த பொருளாதாரமும் வீழ்ந்திருக்கின்றது.

இந்நிலையில் அவர்கள் கொள்ளையடித்த பணத்தைத் திருப்பிக் கொண்டுவராமல் நீதியையும் நியாயத்தையும் கேட்டு நிற்கின்ற மக்களுக்கு எதிராகப் பொருளாதாரப் போர் கட்ட விழ்த்து விடப்பட்டிருக்கின்றது. இதனையும் இந்த நாட்டினுடைய மக்கள் மிகத்தெளிவாக விளங்கிக்கொள்ள ஆரம்பித்திருக் கின்றார். ஆனால், இதனைப் பொதுஜன பெரமுன தரப்பு மட்டும்தான் விளங்கிக்கொள்ளமால் இருக்கின்றது.

ஆட்சியில் இருந்த 15 வருடங்களில் நாட்டை அழித்ததுதான் அவர்கள் அடைந்த மாபெரும் வெற்றியாகும். இவ்வாறு இவர்களது உண்மை முகத்தை மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கையில் புதிதாகப் பெற்ற பதவியை ஏற்று கருத்துரைக்கும்போது மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு பேசி யிருப்பதானது ராஜபக்ச தரப்பினரது விசேடமாக பொதுஜன பெரமுன தரப்பினரது அரசியல் காலம் மிக விரைவில் முடிவுக்கு வருகின்றது என்பதை இது மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின் றது." - என்றார்.

## வெற்றி வாகை சூடினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தருணத்தில் போட்டியில் இருந்து வெளியேறினார்.

பல கட்டங்களில், பல சுற்றுகளில் இந்த இருவரும் தங்களது திறமையை வெளிப்படுத்தியிருந்ததுடன், உலகத் தமிழ் மக்க ளின் அமோக ஆதரவையும் பெற்றிருந்தனர்.

அந்தவகையில், இறுதிப் போட்டி சென்னை நேரு உள்வி ளையாட்டரங்கில் நேற்று மாலை ஆரம்பமானது.

ரிக்ஷிதா, கில்மிஷா, சஞ்சனா, ருத்ரேஷ், நிஷாந்த கவின் மற்றும் கனிஷ்கர் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி யிருந்தனர்.

அவர்களில் கில்மிஷா முதலாமிடத்தைப் பிடித்ததுடன், சரிகமப நிகழ்ச்சியில் டைட்டில் வின்னராகவும் அறிவிக்கப் பட்டார். அவருக்கு 10 இலட்சம் இந்திய ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறிதரனும் போட்டியிட்டால் – அடிபட்டால் – கட்சியின் நலிவுற்றுவிடும் என்று காட்டி, அதை ஒரு துரும்பாகப் பாவித்து, கட்சித் தலைவர் பதவியில் நீடிக்கும் மாவையரின் முயற்சி பெரும்பாலும் பிசுபிசுத்து போய் விட்டது என்று தெரிகிறது.

தலைவர் பதவிக்கு இருவரும் போட்டியிடுவது உட்கட்சி ஜனநாயகத்தின் உச்சம் என்ற சாரப்பட இருவருமே பொது வெளியில் கருத்து வெளியிடத் தொடங்கி விட்டனர். யார் வென்றாலும், யார் தோற்றாலும், தலைவர் தெரிவுக்குப் பின்னர் ஒன்றுபட்டுச் செயல்படுவோம் என்று இருவரும் பகிரங்கமாகக் கூறத் தொடங்கி விட்டமையால், அப்படிக் கீழ்மட்டத் தொண்டர்கள் தேர்தல் மூலம் தலைவரைத் தேர்வு செய்வது கட்சிக்கு ஆரோக்கியமானது என்ற கருத்தியல் இப்போது வெளிப்படத் தொடங்கியிருக்கிறது.

அதனால் இருவருக்குள் மோதல் என்று காட்டி, 'குரங்கு அப்பம் பிரித்த கதையாக' தான் நடுவில் ஆதாயம் தேடும் மாவையரின் எத்தனம் முற்றாக அடிபட்டு போய்விட்டது.

அதனால் மாநாட்டை ஒத்திவைக்கும் வேறு வழிமுறைகளை அவர் தேடுகின்றார் என்று தெரிகிறது.

நேற்றுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையை கட்சியின் பொருளாளரும், கட்சிக்குள் தற்போதுள்ள அவரின் ஒரே சகாவுமான கனகசபாதியுடன் சென்று அவர் சந்தித்தார்.

மாவட்டக் கிளையின் கீழான உறுப்பினர்கள் தெரிவில் தவறு நேர்ந்திருப்பதாக சம்பந்தன் கூறுகின்றார், அதனால் அந்தத் தேர்வுகளை மீள நடத்தி, ஒழுங்குபடுத்திக் கொண்டுதான் மாநாட்டை நடத்த முடியும் என்ற பீடிகையோடு நேற்று மாவட்டக் கிளைக் கூட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார் மாவையர்.

ஆனால், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் செமத்தையாகக் கொடுத்து, மாவையரின் வாயை அடக்கி விட்டனர் என்று தெரிகின்றது. எல்லாம் ஒழுங்காக நடைபெற்று இருப்பதை ஆதியோடு அந்தமாக மாவட்டக் கிளையினர் எடுத்துரைக்க, வாயடைத்துப் போனார் மாவையர்.

இன்று முற்பகல் கட்சியின் திருகோணமலை அலுவலகத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கட்சியின் அரசியல் குழு கூடுகின்றது – கட்சியின் தேசிய மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து இறுதி முடிவுகளை எடுப்பதற்காக.

திருகோணமலை மாவட்டக் குழுவே கட்சியின் தேசிய மாநாட்டு ஏற்பாட்டு குழுவாகச் செயற்படுகின்றது என்பதால், மாவட்டக் குழுவும் இன்றைய அரசியல் குழுக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கின்றது.

அரசியல் குழுவில் உள்ள இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம், சிரேஷ்ட உப தலைவர் சி.வி.கே.சிவஞானம், சிறிதரன், சுமந்திரன், கே.வி.தவராஜா, குலநாயகம், கலையரசன் ஆகியோரில் சம்பந்தன் தவிர ஏனையோர் இன்றைய கூட்டத்தில் பங்கு பற்றக்கூடும். தவிரவும் கட்சி எம்.பிக்களான சாணக்கியன், சார்ள்ஸ் நிர்மலாநாதன் மற்றும் கட்சிப் பொருளாளர் கனகசபாபதி ஆகியோரும் இன்றைய கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். தேசிய மாநாடு பற்றிய இறுதி முடிவு இன்று எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மட்டக்களப்பில் வெள்ளத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவில் 941 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 46 பேரும், போரதீவுப்பற்று – வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 142 பேரும், கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 319 குடும்பங்களைச் சேர்ந்த 929 பேரும், மண்முனைபற்று பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும், காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காத்தான்குடி 2ஆம் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 130 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை, வாகரையில் 2 வீடுகளும், காத்தான்குடியில் ஒரு வீடும், ஏறாவூர்பற்றில் 7 வீடுகளுமாக 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அந்தப் புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதி மீனவர்கள் 14 பேர் அவர்கள் பயணித்த ஒரு படகுடன் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் – கோவளம் கடற்பரப்பில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்ட 14 மீனவர்களும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை இன்று மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்து வந்து யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல் வளத் துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்பின்னர் அவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## புதுத் தும்புத்தடி நன்றாகக் கூட்டும்

பாதாள உலகக் குழுக்களை அடக்கும் மற்றொரு முயற்சி தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸும் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தப் பதவிகளுக்கு வருவோர் வந்தவுடன் ஆரவாரம் பண்ணும் வழமையான விடயம்தான் இது.

பாதாள உலகச் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளை அடியோடு ஒழிக்கப் போகின்றோம் என்று சூளுரைத்த ஜனாதிபதிகள், சம்பந்தப்பட்ட சட்ட - ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் எனப் பலரைக் கண்டுவிட்டோம்.

இப்படிக் கூறிக் கொண்டு பதவிக்கு வந்த அரசியல் தலைவர்களும், பாதுகாப்பு அதிகாரிகளும் அவ்வப்போது மாற, அந்தந்த இடங்களுக்குப் புதியவர்கள் வந்தார்களே தவிர, நிலைமையில் மாற்றமோ, முன்னேற்றமோ ஏற்படவில்லை. மாறாக, நிலைமை மேலும் மோசமடைந்துதான் வந்திருக்கின்றது.

இந்த ஆண்டு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி இரண்டு மாகாணங்களுக்குள் உள்ள 43 பொலிஸ் களங்களில் பாதாள உலகச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன எனப் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் கூறுகின்றார்.

நாட்டில் பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கடுமையான முயற்சிகள் குறித்துக் குறிப்பிட்ட தென்னகோன், இலங்கைமுழுவதும்பாதாளஉலகக்குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களின் செயற்பாடுகள் வேகமாக அதிகரித்து வருகின்றன எனக் கூறப்படுகின்ற போதிலும், அது அவ்வாறு இல்லை எனவும் வலியுறுத்தினார்.

"அனைத்துப்பாதாளஉலகச்செயற்பாடுகளையும் ஒழிக்க வேண்டுமானால், இரண்டு மாகாணங்களை மேம்படுத்த வேண்டும். அவை மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணம்" - என்று இது தொடர்பாக அவர் கூறினார்.

அவரின் கூற்றுப்படி இந்த இரண்டு மாகாணங்களில் மட்டுமே பாதாள உலகக் குழுக்கள் செயற்படுகின்றன.

"சில மாதங்களில் அனைத்துப் பாதாளஉலகக்குழுக்களின்செயற்பாடுகளையும் ஒழிப்போம். பாதாள உலகத்துடன் தொடர்புடைய 1,091 பேர் உள்ளனர். காலையில் ஆள்களைக் கொன்றுவிட்டு மாலையில் துபாய்க்குப் பறக்கிறார்கள். துபாயில் ஒரே வீட்டு வளாகத்தில் 23 கொலைகாரர்கள் வசித்து வருகின்றனர். அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனவரி மாதத்திற்குப் பிறகு, இந்த 1,091 பாதாள உலகக் கும்பல்களும் போலி கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி வந்தாலும் விமான நிலையத்தை விட்டு வெளியேற முடியாது" - என்று பதில் பொலிஸ் மா அதிபர் உறுதியாகக் கூறுகின்றார்.

இதேவேளை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழுவினரை ஒழிக்கும் விசேட நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகப் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிக்கிறார்.

பொலிஸாரின் இந்த விசேட நடவடிக்கைகளின்போது 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். இந்தச் சந்தேக நபர்களில் 45 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு புதியவர் வந்திருக்கின்றார் - பொதுப் பாதுகாப்பு அமைச்சரின் பிடிவாதமான பரிந்துரையில். இந்த இணை ஆரம்பத்திற்கு ஆரவாரம் பண்ணுகின்றது என்றே தோன்றுகின்றது. 'புதுத் தும்புத்தடி நன்றாகக் கூட்டும்' என்பது போல.

# உலகின் மிகப்பெரிய வர்த்தக கட்டடத்தை திறந்து வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி








உலகின் மிகப்பெரிய வர்த்தக கட்டடமான இந்தியாவிலுள்ள சூரத் வைர பங்குச்சந்தை அலுவலக கட்டடத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்துள்ளார்.

இந்தியாவின் வைரத் தொழில் தலைநகரமாக குஜராத்தின் சூரத் நகரம் விளங்குகின்றது. இங்கு உலகின் 90 சதவீத வைரங்கள் பட்டை தீட்டப்படுவதாக கூறப்படுகின்றது.

இந்த தலைநகரில் வைரத்தை வெட்டுதல், பட்டை தீட்டுதல் மற்றும் வியாபாரம் செய்தல் என்பவற்றில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து செயற்படும் விதமாக, 'சூரத் வைர பங்குச்சந்தை' என்ற மிகப்பெரிய அலுவலகம் கட்டப்பட்டுள்ளது.

சூரத் வைர நகரில் 35 ஏக்கர் நிலப்பரப்பில், தலா 15 மாடிகளைக் கொண்ட 9 செவ்வக வடிவ அமைப்புகளாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலக கட்டட வளாகத்தின் மொத்த தள பரப்பளவு 70 இலட்சத்து 10 ஆயிரம் சதுர அடி ஆக காணப்படுகின்றது.

டில்லியைச் சேர்ந்த கட்டடக் கலை நிறுவனமான மார்போஜெனிசிஸ் சுமார் 4 ஆண்டுகளில் இந்தக் கட்டடத்தை கட்டி முடித்துள்ளார். இதற்கான மொத்த செலவு 3 ஆயிரம் கோடி ரூபா என கூறப்படுகின்றது.

இதேவேளை, உலகிலேயே மிகப்பெரிய அலுவலக கட்டடமாக இருந்த பென்டகனை, சூரத் வைர வர்த்தக மைய கட்டடம் முந்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 4 ஆயிரத்து 700 அலுவலகங்கள் உள்ள இந்த வர்த்தக மையத்தில் 65 ஆயிரம் பேர் பணியாற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரபிக்கடலில் கடத்தப்பட்ட கப்பலை இந்திய கடற்படை இடைமறித்தது!

அரபிக் கடல் பகுதியில் கொள்ளையர்களால் கடத்தப்பட்டு சோமாலியா கொண்டு செல்லப்பட்ட மால்டா நாட்டு சரக்கு கப்பலை இந்திய கடற்படை கப்பல் இடைமறித்துள்ளது.

அதேவேளை, அந்த கப்பலை கொள்ளையர்களிடம் இருந்து மீட்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

கடந்த வியாழக் கிழமையன்று அரபிக் கடல் பகுதியில் 18 பேருடன் சென்று கொண்டிருந்த மால்டா நாட்டு சரக்கு கப்பலை (எம்.வி.ரூன்) 6 பேர் கொண்ட கும்பல் கடத்தியதாக அவசர அழைப்பு விடுக்கப்பட்டது.

இதையடுத்து இந்திய கடற்படையின் கண்காணிப்பு விமானம் அரபிக் கடல் பகுதியில் எம்.வி ரூன் சரக்கு கப்பலை தேடும் பணியில் ஈடுபட்டது.

கடந்த வெள்ளிக் கிழமை கண்டுபிடிக்கப்பட்ட கப்பலை கடற்படை விமானம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

எம்.வி.ரூன் கப்பல் சோமாலியாகடல் பகுதியில் புன்ட்லேண்ட் பகுதியை நோக்கி சென்று கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.



இதையடுத்து ஏடன் வளைகுடா பகுதியில் கடத்தல் தடுப்பு ரோந்து பணியில் ஈடுபட்டுள்ள இந்திய கடற்படை கப்பலுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ரோந்து பணியில் ஈடுபட்ட இந்திய கடற்படை கப்பல் எம்.வி.ரூன் கப்பலை நேற்று முன்தினம் காலை இடைமறித்தது.

இதனை தொடர்ந்து எம்.வி.ரூன் சரக்கு கப்பலுக்குள் நுழைந்த கொள்ளையர்களை பிடிக்கும் முயற்சியை, இந்திய கடற்படையினர், கூட்டணி நாடுகளின் கடற்படை உதவியுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# பணயக் கைதிகளை விடுவிக்கும் வகையில் புதிய உடன்படிக்கைக்கு தயாராகும் இஸ்ரேல்



ஹமாஸ் இயக்கத்தின் பிடியிலுள்ள ஏனைய பணய கைதிகளையும் விடுவிக்கும் வகையில் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவது குறித்து பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதிய யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கட்டார் தெரிவித்துள்ள நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவது தொடர்பான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஹமாஸ்சிற்கு எதிரான போரானது அழுத்தம் மற்றும் செலவுகள் நிறைந்தது என்ற போதிலும் வெற்றிக்காக போராட வேண்டும் எனவும் பெஞ்ஜமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், காசா இராணுவமயமாக்கப்பட்டு இஸ்ரேல் பாதுகாப்பு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் எனவும் இஸ்ரேல் பிரதமர் கூறியுள்ளார்.

பணய கைதிகளாக சிறைபிடிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்களில் மூவரை இஸ்ரேலியப் படைகள் தவறுதலாக சுட்டுக் கொலை செய்துள்ள நிலையில், அவரது கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஹமாஸ் இயக்கத்துடனான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக் கும் கட்டார் பிரதமரை இஸ்ரேலிய உளவுத் துறை நிறுவனமான மொசாட்டின் தலைவர் சந்தித்ததை அடுத்து பெஞ்ஜமின் நெதன்யாகு இதனைக் கூறியுள்ளார்.

# சீனாவின் பிடிவாதத்தால் பாரிய சவால்: பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி எச்சரிக்கை



“ஒத்த நிலைப்பாடுகளை கொண்டுள்ள நட்பு நாடுகளுடன் வலுவான கூட்டணி அமைக்கப்பட வேண்டும். அது பிலிப்பைன்ஸ், ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையில் இருக்கும் வலுவான முத்தரப்புக் கூட்டணி போன்றதாக இருக்க வேண்டும்.”

– இவ்வாறு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெர்டினென்ட் மார்கோஸ் ஜுனியர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய ஊடகம் ஒன்றுக்கு டோக்கியோவில் வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தென் சீனக் கடலில் பதற்றம் அண்மைய காலமாக அதிகரித்துள்ளது, தென்சீனக் கடல் தொடர்பில் பிடிவாதமான நிலைப்பாட்டை கொண்டுள்ள சீனா அதன் அண்டை நாடுகளுக்குப் பாரிய சவாலாக உள்ளது.” என்றார்.

அத்துடன், கடந்த 10 ஆம் திகதி பிலிப்பைன்ஸ், சீனா ஆகிய நாடுகள் தென்சீனக் கடலில் உள்ள ஆழம் குறைவான கடற்பகுதியில் தமது கப்பல்கள் மோதிக்கொண்டது குறித்து ஒன்றை ஒன்று குற்றம் சுமத்திக் கொண்டன.

இந்த முக்கியமான ஆழம் குறைந்த கடற்பகுதிக்கு இரு நாடுகளும் உரிமை கோருகின்றன.

இதனை தவிர, ஆசியான் உறுப்பு நாடுகளான வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா, புருணை ஆகிய நாடுகளும் சீனா உரிமை கொண்டாடும் தென் சீனக் கடலில் சில பகுதிகளுக்கு உரிமை கோருகின்றன.

தென் சீனக் கடலில் அமைந்துள்ள ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான வருடாந்த கப்பல் வர்த்தகம் மேற்கொள்ளப்படும் வழித்தடம் தனக்கே சொந்தம் என சீனா கூறிவருகிறது.

கடந்த 2016 ஆம் ஆண்டில் நிரந்தர நடுவர் நீதிமன்றம், சீனாவின் கோரிக்கைகளுக்கு ஆதாரபூர்வமான அடிப்படை காரணங்கள் இல்லை என தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை அமெரிக்கா ஆதரித்தாலும் சீனா அதனை நிரா கரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லிபியாவில் புலம்பெயர்ந்தோர் படகு கவிழ்ந்தது!

ஆபிரிக்க நாடான லிபியா கடற்பகுதியில் புலம்பெயர்ந்தோர் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் 61 பேர் உயிரிழந்துள்ளனர் என புலம்பெயர்வோருக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடல் சீற்றம் காரணமாக ஏற்பட்ட பேரலையால் அந்த படகு விபத்தில் சிக்கியதாக சம்பவத்தில் உயிர் தப்பியோர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் உயிர் தப்பிய 25 பேர்கள் மீட்கப்பட்டு லிபிய தடுப்பு மையத்திற்கு மாற்றப்பட்டு மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த பலரும் நைஜீரியா, காம்பியா மற்றும் பிற ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்தவர்கள் என்றே தெரியவந்துள்ளது.

ஐரோப்பாவில் நுழைய திட்டமிடும் மக்கள் பலர் மத்திய தரைக்கடல் பகுதியை கடக்க லிபியாவை தெரிவு செய்கின்றனர்.

இந்த ஆண்டில் மத்திய தரைக் கடல் பகுதியை கடக்க முயன்ற 2,200 இற்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கெசல்கமுவ ஓயா காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இணையும் இடத்தில் பெண்ணின் சடலம்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

கெசல்கமுவ ஓயா காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இணையும் இடத்தில் பெண்ணொருவரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வென்ச்சர் பகுதியைச் சேர்ந்த பெருமாள் ராக்கம்மா (வயது 82) என அவரது மகள் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெண் கடந்த 10 நாள்களாக வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

டிக்கோயா மரண விசாரணை அதிகாரி ரவிகுமார் சம்பவ இடத்திலேயே விசாரணையை மேற்கொண்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கினார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஐஸ் ரகப் போதைப்பொருளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைது!

**(கனகராசா சரவணன்)**

காத்தான்குடியில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரை 13 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்து காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என மாவட்டக் குற்ற விசரணைப்பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மாவட்டக் குற்ற விசாணைப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமானவின் வழிகாட்டலில் மாவட்டக் குற்ற விசாணைப் பிரிவு பிரதில் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏம்.ஏம்.ஏ. ஷக்கி தலைமையிலான பொலிஸ் குழுவினர் சனி இரவு காத்தான்குடி கரப்பலா பிரதேசத்திலுள்ள போதைப் பொருள் வியாபாரியின் வீட்டைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இதன்போது போதைவியாபரியிடமிருந்து 13 கிராம் ஐஸ் போதை பொருளை மீட்டனர். அதையடுத்து அவரைக் கைது செய்து காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யயப்பட்ட வியாபாரியை 3 தினங்கள பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையில் தாங்கள் ஈடுபட்டுவருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தலவாக்கலை டெவோன் பகுதியில் நேற்று வீதியில் முறிந்து வீழ்ந்த மரத்தால் பாதிப்பு



(தலவாக்கலை நிருபர்)

ஹட்டன் – நுவரெலியா வீதியின் தலவாக்கலை, டெவோன் பகுதியில் நேற்று மரம் ஒன்று முறிந்து வீழ்ந்தமையினால் போக்குவரத்து தடைப்பட்டது. வீதியில் விழுந்த மரத்தை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.





# வவுனியா நரசிங்கர் ஆலயத்தால் கற்றல் வகுப்புக்கள் இலவசமாக

(கி.வசந்தரூபன்)

வவுனியா பூந்தோட்டம் லக்ஷ்மிசமேத நரசிங்கர் ஆலயத்தின் கல்வி சமூக அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் இலவசக் கற்றல் வகுப்புக்களை ஆரம்பிக்கும் நிகழ்வு நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, வறிய குடும்பங்களை சேர்ந்த 125 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேல்வகுப்பு மாணவர்களுக்கான இலவசக் கற்றல் வகுப்புக்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆலயத்தின் தலைவர் கோ.சிறீஸ்கந்தராஜாவின் தலைமையில இடம்பெற்ற இந்நிகழ்வில், முதன்மை அதிதியாக மேலதிக மாவட்டசெயலாளர் தி.திரேஸ்குமார் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புதிய களனிப் பாலத்திற்கு அருகில் நேற்று கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

கிராண்ட்பாஸ் பகுதியின் புதிய களனிப் பாலத்திற்கு அருகில் நேற்று கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையை அடுத்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருதரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்ற நிலையில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சேதவத்த பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் 18 மற்றும் 14 வயதான இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# 1,200 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சைகள் இன்று வவுனியா வைத்தியசாலையில் ஆரம்பம்





(வி.ரி. சகாதேவராஜா)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இன்று திங்கட்கிழமை இரண்டாம் கட்ட கண்புரை சத்திர சிகிச்சை ஆரம்பமாகிறது.

கடந்த 11ஆம் திகதியன்று ஆரம்பமான 1200 சத்திரசிகிச்சை பேருக்கான கண் முகாமில் 600 பேருக்கு சத்திர சிகிச்சை நடைபெற்று நிறைவடைந்துள்ளது.

இவ்வாரத்தில் 650 பேருக்குச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் வியாழக்கிழமைக்குள் 650 அறுவை சிகிச்சைகளை முடித்துள்ளனர்.

நோயாளிகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இன்று டிசம்பர் 18 திங்கள் முதல் பணியைத் தொடர, சென்னையில் இருந்து மூன்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் வருகிறார்கள்.

இந்த முகாம் மலேசியாவைச் சேர்ந்த அலகா மற்றும் ஆனந்தா அறக்கட்டளைகளால் அசிஸ்ட் ஆர்.ஆர். மூலம் முழுமையாக நிதியளிக்கப்பட்டு, அசிஸ்ட் ஆர்.ஆர்.(பிரிட்டன் மற்றும் இலங்கை) மூலம் ஒருங்கிணைக்கப்படுகிறது.

நோயாளிகளுக்கு உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

அசிஸ்ட் ஆர்.ஆர்.(பிரிட்டன் மற்றும் இலங்கை) அமைப்பின் இலங்கை இணைப்பாளர் எந்திரி ஹென்றி அமல்ராஜ் கூறுகையில் –

இரண்டு கண்களும் பார்வையற்ற சில நோயாளிகளுக்கு நாங்கள் உதவி செய்துள்ளோம். அவர்கள் மீண்டும் உலகைப் பார்க்க முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். தாராளமாக நன்கொடை வழங்கிய அலகா மற்றும் ஆனந்தா அறக்கட்டளைகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். 3 சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கும் (சிலாபம் மாவட்டப் பொது வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் கசுன் குணவர்தன, வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் பி.கிரிதரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் நிஸ்மா ராஸிக்) மற்றும் அவர்களின் குழுவினருக்கும் அவர்களின் தன்னலமற்ற சேவைகளுக்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அடுத்த வாரம் இம்முகாமின் நிறைவில் வவுனியாவில் காத்திருப்போர் பட்டியலை நீக்குவோம் என நம்புகிறோம். – என்றார்.











# திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுகின்ற குழுக்களை ஒடுக்கும் விசேட சுற்றிவளைப்பு

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்கள் மற்றும் முப்படைகளின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் கூறியுள்ளார்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் தொடர்பில் கிடைத்த புலனாய்வுத் தகவலின் பிரகாரம் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




# சுமந்திரன், சம்பந்தன் அணியினரின் ஒரு முகமூடி உலகத்தமிழர் பேரவை

## தமிழ் மக்கள் ஏமாறக் கூடாது என்கிறார் கஜேந்திரன் எம்.பி.

**(கனகராசா சரவணன்)**

சுமந்திரன், சம்பந்தனின் ஒரு முகமூடியே இந்த உலகத் தமிழர் பேரவையினர். ஒற்றையாட்சியைப் பலப்படுத்தி, அதற்குள் தமிழர்களை கொண்டு சென்று புதைத்து, எதிர் காலத்தை இல்லாமல் செய்வதும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடை முறைப் படுத்தக் கோருவதும் இலங்கை அரசை ஒரு நியாயமான அரசாக காட்டுவது மட்டும்தான் இவர்களது நோக்கம். எனவே தமிழ் மக்கள் ஏமாந்து விடக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக் கட்சி செயலாளருமான செல்வ ராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த ஒரு வாரமாக ஊடகங்களில் பரபரப்பாக போய்க் கொண்டிருக்கும் விடயம் இந்த உலகத் தமிழர்களுடைய நாடகம். இந்திய – மேற்கு நாடுகளின் கூட்டாக இயக்குநர்களாக இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறை முகமாக பாத்திரத்தை ஏற்று, ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கு கின்றதுடன் ரணில் விக்கிரமசிங் கவை தமிழ் மக்களுடைய பிரச்சினை களை தீர்த்து வைக்க கூடிய ஒரு லிபரல்வாதியாக (தாராளவாதியாக) காட்டி உலக நாடுகளில் இருந்து ரணிலுக்கு தேவைப்படுகின்ற நிதி உதவி களை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு ஏமாற்று நாடகமாகும்.

இந்த உலகத்தமிழ் பேரவையும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் கடந்த 14 வருடங்களில் குறைந்தது 12 வருடங்கள் ஒன்றாக ஜ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் மற்றும் பல இராஜதந்திர மட்டங்களுக்கும் சென்று தமிழ் மக்களின் எதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் பல காரியங்களைச் செய்திருக்கின்றனர்.

குறிப்பாக சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக முடக்குகின்ற சுமந்திரனது செயற்பாடுகளுக்கு இந்த உலக தமிழர் பேரவை முழுமையாக பக்கபலமாக இருந்திருக்கின்றது. அதேபோன்று 2015 ஆம் ஆண்டிலே ரணில் மைத்திரியோடு இணைந் திருந்தபோது அவர்களுடன் இணைந்து ஒற்றையாட்சிக்குள் 'ஏக்கராஜ்ஜிய' என்ற ஆட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குகின்ற முழு சதிமுயற்சிகளுக்கும் சுமந்திரனுடன் ஒன்றாக சேர்ந்து பயணித்தவர்கள்தான் இவர்கள்.

ஒருபுறம் ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என சர்வதேசத்திற்கு நம்பிக்கையை ஏற்படுத்தி, நிதிகளைப் பெற்றுக் கொடுப்பதை செய்து கொண்டு மறுபுறம் தமிழ் தேசிய உணர்வுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என ஒற்றையாட்சியைப் புறக்கணித்து சமஷ்டித் தீர்வு தேவை எனத் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கோபத்தைத் தணிப்பதற்காக நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் ரணிலை விமர்சிக்கின்ற பாத்திரத்தை ஏற்று மிகச் சிறப்பாக நடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் உலகத் தமிழர் பேரவையுடன் தாங்கள் ஒன்றாக இருந்து செயற்படுவதை காட்டிக் கொள்ளாமல் அவர்கள் தன்பாட்டில் வந்தவர்கள் போலவும், அவர்களை தாங்கள் சந்தித்து அதற்கு ஆதரவு தெரிவிப்பது போல மூன்று நான்கு வேடங்களில் நடித்துக் கொண்டிருக் கின்ற பன்முக நாடகங்களில் ஒன்று தான் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நடவடிக்கை. இவர்களது சதிகள், துரோகங்கள் எல்லாம் இன்று அம்பலமாகி முழுமையாக நிராகரிக்கப்படுகின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே உலகத்தமிழர் பேரவை யின் ஆரம்பக் கோரிக்கையே தமிழர்களைக் குழிதோண்டி புதைப்பதாகும். அதனை அடியோடு நிராகரிக்கின்றோம். புலம் பெயர்ந்த மக்கள் இந்த உலகத்தமிழ் பேரவையின் துரோகங்கள், சதிகளை வெளிப்படுத்த வேண்டும், முழுமையாக நிராகரிக்க வேண்டும். – என்றார்.

# இன்று முதல் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

இன்று முதல் 05 நாள்களுக்கு நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பருவப்பெயர்ச்சி மழை தீவிரமடைந்துள்ள நிலையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

வடக்கு , கிழக்கு, மேல், தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இன்று மற்றும் நாளைய தினம் விசேட பூச்சியியல் ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 82 ஆயிரத்து 36 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் 49 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.





# ரூ.1 கோடி பெறுமதியான முப்பது கஞ்சா பொதிகள் கிளிநொச்சியில் வீட்டின் கூரையில் இருந்து மீட்பு!

(எம்.எம்.றம்ஸீன்)

விசேட போதை பொருள் ஒழிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் இத்திட்டம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரால் அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப் புரை விடுக்கப்பட்டிருந்தது.

இவ் பணிப்பின் கீழ் விசேட போதை பொருள் ஒழிப்பு குழு ஒன்றை அமைத்து இக்குழுவின் ஊடாக கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பாரதிபுரம் பகுதியில் பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் மோப்பநாய் சகிதம் தேடுதலை மேற்கொண்ட போது சுமார் 68 கிலோவுக்கும் மேற்பட்ட – சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான – 30 கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் வீடு ஒன்றின் கூரை தகடுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.



# நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு

(ரஸீன் ரஸ்மின்)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக அநுராதபுரம் – நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என நாச்சியாதீவு நீர்ப்பாசன பொறியிய லாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாச்சியாதீவு நீர்த்தேக் கத்தின் 6 வான் கதவுகளில் 2 வான் கதவுகள் தலா 4 அடி உயரத்திலும், 2 வான் கதவுகள் தலா 3 அடி உய ரத்திலும், 2 வான் கதவுகள் தலா 2 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள் ளன.

இதன் காரணமாக இந்த நீர்த் தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 2,200 கன அடி நீர் வெளியேற்றப்படு வதாகவும் நாச்சியாதீவு நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்துள் ளார்.





# முல்லைத்தீவில் தொடர் மழையினால் 56 கிராமங்களுக்குப் பெரும் பாதிப்பு

## 68 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில்

**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. 56 கிராமங்களைச் சேர்ந்த 976 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இரண்டு இடைத்தங்கல் முகாம்களில் 68 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சி. கோகுலராஜா தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்தம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் அவர் இத்தவலை வெளியிட்டார்.

அதிகமாகக் குளங்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்துக் குளங்களும் நீர் நிரம்பி வழிகின்றன. முத்துஐயன்கட்டுக் குளத்தின் நான்கு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. தண்ணிமுறிப்புக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

இந்தக் குளங்களின் கீழ் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். வெள்ள நீர் வழிந்து ஓட முடியாத நிலையில் பல்வேறுபட்ட குடியிருப்புகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 56 கிராம சேவகர் பிரிவுகள் முல்லத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. 976 குடும்பங்களைச் சேர்ந்த 3010 பேர் நேற்றுக் காலை வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு இடைத்தங்கல் முகாம்களில் 68 குடும்பங்களை சேர்ந்த 222 அங்கத்தவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். அதிகளவான வெள்ள நீர் புகுந்துள்ளதால் 15 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் குடியிருக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பண்டார வன்னி கிராமத்தைச் சேர்ந்த 63 குடும்பங்களின் 201 அங்கத்தவர்கள் கருவேலன்கண்டல் அ.த.க.பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். புளியங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் ஐந்து குடும்பங்களை சேர்ந்த 21 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கும் நடவடிக்கையில் அரச திணைக்களங்கள் ஈடுபட்டுள்ளன.

கிராமத்தில் உள்ள மக்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கிராம சேவையாளர்களுக்குத் தகவல்களை வழங்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.

தற்போது பெய்து வரும் பருவ மழை இன்னும் இரண்டு, மூன்று நாள்களுக்குத் தொடரக்கூடிய சாத்தியக் கூறு காணப்படுகிறது. அத்தோடு மேலும் ஒரு காற்றழுத்தம் ஒன்று வங்கக் கடலில் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறும் காணப்படுவதால் மக்கள் இவற்றைக் கவனத்தில் கொண்டு அவதானமாக இருக்க வேண்டும் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.











# ஐ.நாவின் இலங்கைக்கான பிரதிநிதி கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஹென்றி, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை நேற்றுள சந்தித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஹென்றி உள்ளிட்ட உயர்மட்டக் குழு இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.









# மாணவ, மாணவிகள் மத்தியிலும் போதைப் பொருள்கள் பாவனை

இலங்கையில் வடமத்திய மாகாணத்தில் இயங்கும் சில பாடசாலைகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள்கள் தரகர்கள் மூலமாக இந்தப் பிள்ளைகளின் கைகளுக்கு செல்கின்றன. சில மருந்தகங்களில் விற்பனை செய்யப்படும் வலி நிவாரணி மாத்திரைகள், புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் மாத்திரைகள் என்பனவும் மாணவர்களின் கைகளுக்குக் கிடைத்து வருகின்றன.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதை மாத்திரை பாவனை மற்றும் செல்போன்களில் ஆபாச படங்களை பார்க்கும் பழக்கம் அதிகரித்துள்ளது.

பாடசாலைகள் மாணவிகளில் சிலர், போதை மாத்திரைகளை விலைக்கு வாங்குவதற்காக தமது உடலை தொட அனுமதித்து பணத்தை பெற்றுக் கொள்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது எனவும் பிரியந்த பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இதனிடையே பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்ய எடுத்துச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஒருவரை கைது செய்து, எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்துள்தாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நீதிபதிகள், நீதிவான்கள் 54 பேருக்கு இடமாற்றம்

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், நீதிமன்ற நீதிவான்கள் 54 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வருடாந்த இடமாற்றங்களின் கீழ் சேவைத் தேவைகளின் அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, கடுவெல, பூகொட, மாரவில, களுத்துறை, மாத்தளை, எல்பிட்டிய, மொனராகலை, புத்தளம், கிளிநொச்சி மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஹோமாகம, நீர்கொழும்பு, பண்டாரவளை, நுவரெலியா, மட்டக்களப்பு, கேகாலை, எல்பிட்டிய, பலப்பிட்டிய, மெதவாச்சி, நொச்சிகம, நாவுல, ஆனமடுவ, அகுனகொலபலஸ்ஸ மற்றும் கஹட்டகஸ்திகிலிய ஆகிய பிரிவு நீதிவான்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராகின்றார் மொண்டி காசிம்



மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக பேராசிரியர் மொண்டி காசிம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.





# நாணய நிதியம் தொடர்பில் பொறுப்புடன் செயற்பட அரசியல் தலைவர்களைக் கோருகின்றார் ஜனாதிபதி

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் போது பொறுப்புடன் செயற்படுமாறு, அனைத்து அரசியல் தலைவர்களிடமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டி மாநகர சபையின் 'கரலிய அரங்கம்' மற்றும் கலைக்கூடம் என்பவற்றை திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி நேற்றுக் கலந்து கொண்டார்.

கண்டி மாநகர சபையினால் 2018 ஆம் ஆண்டு இதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக மாநகர சபையினால் 60 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை நிராகரிக்கும் அனைவரும் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பொறுப்புக்களை ஏற்காமல் மக்களை மகிழ்விக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடும் அரசியலானது நாட்டை மீண்டும் பாதாளத்துக்கு இழுத்துச் செல்லும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.







# யாழில் நடைபாதை வியாபார நிலையங்களை அகற்ற பொலிஸாருக்கு ஆளுநர் பணிப்புரை

(ந.லோகதநாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ் மாவட்டத்தில் காணப்படும் அனுமதியற்ற நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு பொலிஸாருக்கு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமையால் டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம் சார்ள்ஸ் துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு நுளம்பு அதிகம் பரவும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக வடிகான்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு வடிகான்களை சுத்தப்படுத்துவதோடு, வீதி ஓரங்களில் போடப்பட்டிருக்கக்கூடிய நடைபாதை வியாபார நிலையங்களையும் உடனடியாக அப்புறப்படுத்துமாறும் பொலிஸாருக்கு ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடன் அமுலாகும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் ஊடாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரத்தரப்பினர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கி உள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.12.2023




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். உங்கள் தேவைகள் நிறைவேறும். இன்றைய நாளை முக்கிய முடிவுகள் எடுக்க பயன்படுத்தலாம்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் திருப்தியும் உற்சாகமும் காணப்படும். நீங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்வீர்கள்.

நல்ல உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இன்று இனிமையான நாள். உங்கள் புரிந்துணர்வு காரணமாக இது சாத்தியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். எதிர் காலத்திற்காக நீங்கள் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும்.இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று துடிப்பான நாளாக காணப்படும்.இன்று பயணம் மேற்கொள்ள வாய்ப்புள்ளது. அதன் மூலம் உங்கள் ஆற்றல் பெருகும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சாதகமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் செய்யும் பணியில் திருப்தி காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

உறவு சம்பந்தப்பட்ட விஷயங்கள் இன்று சுமூகமாக நடக்கும். உங்கள் துணை உங்கள் உணர்வை நன்கு புரிந்து கொள்வார். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்றைய தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு பணம் காணப்படும். பணத்தை சிறந்த முதலீடு செய்வதற்கு பயன்படுத்துவீர்கள்.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் எதிர்காலம் குறித்த பயம் காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த உணர்வை சமாளிக்கலாம்.

இன்று பணிகள் அதிகரித்து காணப்படும். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை சிறப்பாக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. இதற்கு காரணம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ளாததே ஆகும்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும். சூழ்நிலையை திறமையாக சமாளிக்க இயலாத நிலை இருக்கும். தேவையற்ற பொறுப்புகள் கவலை அளிக்கும்.

தொடை சம்பந்தமான பிரச்சினை காணப்படும்.




இன்று மந்தமான நாளாக இருக்கும். மனக்குழப்பம் காணப்படும். எனவே பொருத்தமான முடிவுகளை எடுக்க இயலாது. சிறிது பொறுமையுடன் இருப்பது நல்லது.

பணியிடத்தில் சில பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். சக பணியாளர்களின் தொல்லைகள் காணப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாது.

உணர்சிவயபப்படுதல் காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். நீங்கள் அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அஜாக் கிரதை காரணமாக பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

கால் வலியால் இன்று பாதிப்பு ஏற்படலாம்.




இன்று நீங்கள் அமைதியுடன் இருப்பீர்கள். நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். அனுசரணையான போக்கு காணப்படும்.

இன்று உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்றுவீர்கள். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள்.அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையுடன் நீங்கள் நட்புறவோடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் வளரும்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் உள்ளது.பணத்தை ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு செலவு செய்வீர்கள்.

நீங்கள் இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க இயலும்.




இன்று நகைச்சுவை உணர்வுடன் காணப்படுவீர்கள்.அதனால் உற்சாகம் ஏற்படும். உங்களைச் சுற்றியிருக்கும் விஷயங்களை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக ஆற்றுவீர்கள்.

இன்று உங்களிடம் நகைச்சுவை உணர்வு காணப்படும். இந்த அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். நீங்கள் மகிழ்ச்சியான ஆரோக்கியமான உறவை பராமரிப்பீர்கள்.

பணம் இன்று தேவையை விட அதிகமாக இருக்கும். இன்று அதிகம் சேமிப்பீர்கள். புதிய முதலீடு செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள். இது வெறும் உணர்வு மட்டுமே. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.

இன்று பணியிடத்தில் அதிக வளர்ச்சி காண முடியாது.முறையாக திட்டமிடாததே இதற்கு காரணம். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். குடும்ப பிரச்சினை காரணமாக இருவரிடையே வாக்குவாதம் ஏற்படும்.

நிதி வளர்ச்சியில் இன்று பாதிப்பு காணப்படும். இன்று அதிக செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

கண் சம்பந்தமான பிரச்சினை இன்று காணப்படும். பிரச்சினைஅதிகமாகாமல்இருக்கமருத்துவரைஆலோசிக்கவும்.




இன்று அதிக பதட்டம் காணப்படும். தியானம் அல்லது யோகா செய்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

கவனக்குறைவு காரணமாக இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. அதனை நீங்கள் தவிர்த்தல் வேண்டும்.

உங்கள் துணையுடன் அகந்தை உணர்வு காரணமாக பிரச்சினை ஏற்படும். சரியான புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம். அதனை வளர்த்துக் கொள்ள முயலுங்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பணத்தை கையாளும்போது கவனம் தேவை. இன்றைய நாளை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

மன உளைச்சல்காரணமாக இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.12.2023




இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு காணப்படும். இந்த உணர்வு காரணமாக பொருத்தமான முடிவுகளை எடுப்பீர்கள்.

நீங்கள் பணியிடத்தில் தலைமைப் பண்புகளை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் சிறந்த வளர்ச்சி காணப்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். நீங்கள் இருவரும் காதலை அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று ஊக்கத் தொகை வகையில் கூடுதல் பண வரவு காணப்படும். உங்கள் கடின உழைப்பிற்கு பலன் கிடைக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் தன்னம்பிக்கை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறந்த பலன்களை அடைய இயலாது. அது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் திறமையை அதிகரிக்க முறையாக திட்டமிடுவது சிறந்தது.

நீங்கள் ஏற்படுத்தும் சிறிய பிரச்சினைகள் உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். உங்கள் துணையுடன் நீங்கள் நட்புறவோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். சோம்பலான அணுகுமுறை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படலாம்.

சளி சம்பந்தமான பிரச்சினையால் இன்று பாதிப்பு ஏற்படும். ஒவ்வாமை காரணமாக இன்று அசௌகரியம் காணப்படும்.




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிகரிக்கும் பொறுப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பணிகள் அதிகமாக காணப்படும்.அதனை விரைவில் முடித்துத் தர வேண்டியிருக்கும். அது அவ்வளவு எளிதானதல்ல.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது பொறுமை இழப்பீர்கள். இதனால் இருவரிடையேயான நல்லுறவு பாதிக்கும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். நிலைமையை சமாளிக்க கையில் போதிய பணம் இருக்காது. இது உங்களுக்கு சற்று கவலை அளிக்கும்.

இன்று பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் சிறிது வெற்றி காணலாம்.

உங்கள் மேலதிகாரிகளுடன் மோதல்கள் காணப்படும். உங்களின் திறமை காரணமாக அவர்களை மிஞ்சி விடுவீர்கள் என்று நினைப்பதால் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

புரிந்துணர்வின்மை காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படும். நட்பான உறவு வேண்டுமெனில் இதனை நீங்கள் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பயணத்தை தவிர்ப்பது நல்லது. உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்கு பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.

இன்று கால் வலி காணப்படும்.

